ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2188/47 - 2020 අගෝස්තු මස 14 වැනි සිකුරාදා - 2020.08.14
*2188/47 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஓகத்து 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*39 (அ) (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2013, நவெம்பர் 22 ஆந் திகதிய 1837/56 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) பிரசுரிக்கப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 348 ஆம் இலக்க காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம்(அ) வின் கீழான கட்டளையில் விபரிக்கப்பட்ட காணித்துண்டுகள் முழுமையாக அரசுரித்தாக்கப்பட்டுள்ளதோடு அரசின் சார்பில் அச்சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) ஆம் பந்தியின் கீழ் இக் காணித் துண்டுகளின் உடைமையும் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. எனினும் அச் சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் சமரகோன் முதியன்சேலாகே சந்திரசேன ஆகிய நான், குறித்த காணித் துண்டுகளில் கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட முழுக்காணித் துண்டினை இக் கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.*

எஸ்.எம். சந்திரசேன,
*காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர்.*

எனது இல : 4-3/ 10/2011/LRB/44.
காணி எடுத்தல் உத்தியோகத்தரின் இல.: GCF/ATH/KD/21A/LR.
*காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு,*
*"மிஹிகத மெதுர", காணிச் செயலகம், இல. 1200/6,*
*ரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை,*
*2020, யூலை 15.*

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கடுவெல பிரதேச செயலாளர் பிரிவில், இல. 479ஈ- பட்டபொத கிராம அலுவர் பிரிவில் தலங்கம தெற்கு(கடுவெல மாநகர சபை எல்லையினுள்) கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2020.02.18 ஆந் திகதிய CO/KDW/2019/645 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் காட்டப்பட்ட எல்லைகளுள் அமைந்த காணித்துண்டு:

*1.* **துண்டு 'A' - லபுவெல்தெனிய அல்லது ஈரியகஹ கும்புர - விஸ்தீரணம் : *(11.35 பேர்ச்சஸ்) 0.0287* ஹெக்டயார்**

வடக்கு : துண்டு B மற்றும் கொ 8559 ஆம் ஆரம்ப வரைபடத்தின் துண்டு இல. 23; கிழக்கு : கொ 8559 ஆம் ஆரம்ப வரைபடத்தின் துண்டு இல. 23; தெற்கு: கொ 8559 ஆம் ஆரம்ப வரைபடத்தின் துண்டு இல. 23 மற்றும் 25, கொ 9681 ஆம் ஆரம்ப வரைபடத்தின் துண்டு இல. 24; மேற்கு: கொ 9681 ஆம் ஆரம்ப வரைபடத்தின் துண்டு இல. 24 மற்றும் 27, இந்த வரைபடத்தின் துண்டு B.

*08-562*



*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*